இந்தக் கேள்வியை, கடைசியாக எடுத்துக்கொண்டுள்ளீர்கள். சென்டிமென்ட்டாக நாங்கள்தான் மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என்பதற்கு அடையாளமாக இன்றைக்கு இது இருக்கின்றது. சிறப்பான ஒரு நல்லாட்சியை நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், உறுதுணையாக இருந்து செயலாற்றிவரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகராட்சியில் புதிய மீன் விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் குறித்த கோரிக்கை மீண்டும் துறைக்கு அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். "வாராரு; விடியல் தரப் போறாரு" எனக் கூறுபவர்களுக்கு நிரந்தர இருளைப் பரிசாகக் கொடுத்து, "வெற்றிநடை போடும் தமிழகமே" என்று சொல்லும் வகையில் நிரூபித்துக் காட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகளை சட்டமன்றத்தில் மட்டுமல்ல; தமிழகத்தில் எங்கும் காணாமல் செய்த நம் குடும்பங்களின் மூத்த அண்ணன், தமிழகத்தினுடைய நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன், எடப்பாடியார் அவர்களை வணங்கி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் நகரத்தின் ஒரு பகுதியில் மீனவ சமுதாயத்தினர் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய ஜீவாதாரத் தொழில் மீன் விற்பனை செய்து பிழைத்து வருவதாகும். சென்னைக்குப் பக்கத்தில் அரக்கோணம் உள்ளதால், சென்னையிலிருந்து மீன்களைக் கொண்டு வந்து சாலை ஓரங்களில் வைத்து விற்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஒரு மீன் விற்பனைக் கூடம் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

2021 பிப்ரவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் எனது பதிலில் தெரிவித்தபடி உறுப்பினரின் கேள்வி துறைக்கு அனுப்பப்படவிருக்கிறது. நாம் நிச்சயமாக மக்களைச் சந்திப்போம்; மீண்டும் அம்மா அவர்களின் அரசு உருவாகும், உருவாகும், உருவாகும் என்று சொல்லி, அந்த நிலையில்தான் நாங்கள் உங்களுக்கும் செய்யவிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. அறிவிப்புகள்

(அ) 'காகிதமில்லா சட்டமன்றம்' எனும் இலக்கினை எய்திடும் நடவடிக்கையின் தொடர்ச்சியாக, நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பெற்றுள்ள அவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகளில் உள்ள அறிவிக்கைகள் மற்றும் ஆண்டறிக்கைகள் உறுப்பினர்களுக்கு மென்பொருள் வடிவில் மின்னஞ்சல்மூலம் அனுப்பப்பட்டுள்ளமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *"காகிதமில்லா சட்டமன்றம்" எனும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியாக, இன்றைய (27-2-2021) நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அவைமுன் வைக்கப்பெறும் ஏடுகளில் (அ)-ல் வரிசை எண் 80 முதல் 93 வரை உள்ள 14 அறிவிக்கைகள் மற்றும் வரிசை எண் 94 முதல் 97 வரை உள்ள 4 ஆண்டறிக்கைகள் ஆகியவற்றின் மென்பொருள் வடிவம் PDF முறையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2021-2022 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளின்மீது உறுப்பினர்களால் அளிக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்ட வெட்டுத்